வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

தேதி : 02.06.2024 நேரம் : மாலை 6.10 மணி

---

<u>தலைப்புச் செய்திகள்</u>

- பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று ஒரே நாளில் 7 ஆய்வுக் கூட்டங்களில் பங்கேற்றார்.
- அருணாச்சல பிரதேச சட்டப்பேரவை தேர்தலில் பாஜக முன்னிலை பெற்று ஆட்சியை மீண்டும் கைப்பற்றி உள்ளது. இதே போல் சிக்கிம் மாநிலத்தில் ஆளும் கிராந்திக் காரிக் மோட்சா கட்சி பெரும்பான்மை பெற்று மீண்டும் ஆட்சியை தக்க வைத்துள்ளது.
- நாடாளுமன்ற தேர்தல் முடிவுகள் நாளை மறுதினம் வெளியாக உள்ள நிலையில் அடுத்தக் கட்ட உத்திகள் குறித்த ஆலோசனையில் காங்கிரஸ் கட்சி தலைவர்கள் ஈடுபட்டுள்ளனர்.
- வளர்ச்சி அடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற குறிக்கோளுக்கு திருக்குறள் தான் ஊக்கத்தை அளித்ததாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

<u>மோடி (9)</u>

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று ஒரே நாளில் 7 ஆய்வுக் கூட்டங்களில் பங்கேற்றார். முதலாவதாக வடகிழக்கு மாநிலங்களில் புயலால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து அவர் ஆய்வு மேற்கொண்டார். அதன் பின்னர் நாடு முழுவதும் வெப்பச் சலனத்தால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்தும் பிரதமர் ஆய்வு மேற்கொண்டார். இதனை தொடர்ந்து, உலகச் சுற்றுச்சூழல் தினத்தை பெரிய அளவில் கொண்டாடுவதற்கு மேற்கொள்ளப்பட்டு வரும் ஏற்பாடுகள் குறித்தும்

அவர் ஆய்வு செய்தார். மேலும், 100 நாள் வேலை வாய்ப்புத் திட்டம் தொடர்பான ஆய்வுக் கூட்டத்திலும் பிரதமர் கலந்து கொண்டார்.

*சட்டமன்ற தேர்தல்* (14)

அருணாச்சல பிரதேச சட்டப்பேரவை தேர்தலில் பாஜக முன்னிலை பெற்று ஆட்சியை மீண்டும் கைப்பற்றி உள்ளது. இதே போல் சிக்கிம் மாநிலத்தில் ஆளும் கிராந்திக் காரிக் மோட்சா கட்சி பெரும்பான்மை பெற்று மீண்டும் ஆட்சியை தக்க வைத்துள்ளது. சிக்கிம் மாநிலத்தில் திரு பிரேம்சிங் தமாங் மீண்டும் முதலமைச்சராக பதவி ஏற்க உள்ளார். அருணாச்சல பிரதேசத்தில் மொத்தம் உள்ள 60 சட்டப் பேரவை தொகுதிகளில் ஆட்சி அமைக்க 31 இடங்கள் தேவைப்படும் நிலையில், பிஜேபி 46 இடங்களை கைப்பற்றி உள்ளது.

சிக்கிம் மாநிலத்தில் ஆளும் சிக்கிம் கிராந்திக் காரிக் மோட்சா மொத்தமுள்ள 32 சட்டமன்ற தொகுதிகளில் 31 இடங்களை கைப்பற்றி உள்ளது. இவ்விரு மாநிலங்களிலும் சட்டப் பேரவையின் பதவிக்காலம் இன்றுடன் முடிவடைவதால் முன் கூட்டியே வாக்கு எண்ணிக்கை நடைபெற்றது. அருணாச்சல பிரதேசம், சிக்கிம் மாநிலங்களில் உள்ள தலா 1 மக்களவை தொகுதிக்கான வாக்கு எண்ணிக்கை நாளை மறுநாள் நடைபெற உள்ளது.

*குடியரசு தலைவர்* (4)

மத்திய பிரதேச மாநிலம் ஷிவ்பூர் மாவட்டத்தில் நிகழ்ந்த படகு விபத்தில் 5 குழந்தைகள் உட்பட 7 பேர் நீரில் முழ்கி உயிரிழந்தனர். உயிரிழந்தோரின் குடும்பத்திற்கு குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.

## இறுதிக் கட்ட தேர்தல் 1 (17)

18 ஆவது மக்களவை தேர்தலுக்கான இறுதிக் கட்ட வாக்குப் பதிவு நேற்று நிறைவடைந்தது. இறுதிக் கட்ட தேர்தலில் 62.36 சதவிகித வாக்குகள் பதிவாகின. இதன் மூலம் கடந்த இரண்டரை மாத காலமாக நடைபெற்று வந்த நாடாளுமன்ற தேர்தல் திருவிழா நிறைவு பெற்றது. மக்களவை தேர்தல் இம்முறை 7 கட்டங்களாக நடத்தப்பட்டது. முதல் 6 கட்ட தேர்தல்கள் அமைதியாக நடந்து முடிந்த நிலையில், 7 ஆவது மற்றும் இறுதிக் கட்டமாக பிரதமர் திரு நரேந்திர மோடி போட்டியிடும் வாரணாசி உட்பட 8 மாநிலங்களை சேர்ந்த 57 தொகுதிகளிலும் நேற்று வாக்குப் பதிவு நடைபெற்றது. இத் தொகுதியிலும் வாக்குப் பதிவு அமைதியாக நடைபெற்று முடிந்ததாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. இதனை ஒட்டி, வாக்காளர்கள், தேர்தல் பணியில் ஈடுபட்ட அலுவலர்கள், பாதுகாப்பு படையினர், ஊடகங்கள் மற்றும் அரசியல் கட்சிகளுக்கு தேர்தல் ஆணையம் நன்றி தெரிவித்துள்ளது. வாக்குப் பதிவு முடிவடைந்ததை அடுத்து அனைத்து தொகுதிகளிலும் பதிவான வாக்குகள் வருகிற 4 ஆம் தேதி செவ்வாய் கிழமையன்று எண்ணப்பட்டு, முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளது. இந்நிலையில், தேர்தலில் வெற்றி பெற்று பதவி ஏற்புக்காக புதுடெல்லி வர உள்ள புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களை

## இறுதிக் கட்ட தேர்தல் 2 (8)

வரவேற்பதற்கான ஏற்பாடுகளில் மக்களவை செயலகம் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இது தொடர்பான பணிகளை மக்களவை தலைமை செயலர் திரு உத்பல் குமார் நேரில் கண்காணித்து ஆய்வு செய்து வருகிறார். புதிய உறுப்பினர்களை வரவேற்க ரயில் நிலையம், விமான நிலையங்களில் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருப்பதுடன், அவர்கள் தற்காலிகமாக தங்குவதற்கான இடங்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. புதிய உறுப்பினர்களின் விபரங்களை பதிவு செய்யும் பணிகளுக்கு மட்டும் 70 அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையம் (13)

பல்வேறு புகார்களுக்கு மத்தியில் நாடாளுமன்ற தேர்தல் நேற்று முடிவடைந்தது. தேர்தலில் வாக்களித்த வாக்காளர்களுக்கு இந்திய தேர்தல் ஆணையம் நன்றி தெரிவித்துள்ளது. 7 கட்டங்களாக நடைபெற்ற வாக்குப் பதிவு வெற்றிகரமாக அமைந்ததற்கு தேர்தல் ஆணையம் மகிழ்ச்சி தெரிவித்துள்ளது. பல்வேறு சவால்களையும் கடந்து, வாக்குச் சாவடிக்கு சென்று வாக்களித்த அனைத்து வாக்காளர்களுக்கும் நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்வதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. இந்திய ஜனநாயகமும், இந்திய தேர்தல்களும் மீண்டும் ஒரு மாயாஜாலம் நிகழ்த்தி இருப்பதாகவும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. நூற்றாண்டு கண்ட முதியவர்கள், மூத்த குடிமக்கள், மாற்றுத் திறனாளிகள், திருநங்கைகள் போன்றவர்களுக்கும் தேர்தல் ஆணையம் நன்றி தெரிவித்துள்ளது. அச்சு, மின்னனு, டிஜிட்டல் ஊடகங்களின் பங்களிப்பிற்கும் தேர்தல் ஆணையம் நன்றி தெரிவித்துள்ளது.

பிரதமர்-நன்றி (17)

மத்தியில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி மீண்டும் அமைய இந்திய மக்கள் பெருமளவில் வாக்களித்து இருப்பார்கள் என தாம் நம்புவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். நாடாளுமன்ற தேர்தல் நிறைவடைந்ததை ஒட்டி, அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், வாக்களித்த வாக்காளர்கள் அனைவருக்கும் தமது இதயபூர்வமான நன்றியை உரித்தாக்குவதாக தெரிவித்துள்ளார். வாக்காளர்கள் ஆர்வத்துடன் தேர்தலில் பங்கேற்பதே நமது ஜனநாயகத்தின் சிறப்பம்சம் என குறிப்பிட்டுள்ள அவர், வாக்காளர்களின் அர்ப்பணிப்பும், உணர்வும், உறுதிப்பாடும் நம் நாட்டில் ஜனநாயக உணர்வு தழைத்து ஓங்குவதை உறுதிப்படுத்தி உள்ளது என்றும் தெரிவித்துள்ளார். சந்தர்ப்பவாத இண்டி கூட்டணி மக்களின் நம்பிக்கையை பெற தவறி விட்டதாகவும் அவர்

தெரிவித்துள்ளார். இந்த கூட்டணி வாரிசுகளை பாதுகாப்பதிலேயே கவனம் செலுத்தியதால் தேச நலனுக்கான தொலைநோக்கு எதையும் அவர்களால் தெரிவிக்க முடியவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். மேலும், தேர்தல் பணியில் முனைப்புடன் ஈடுபட்ட பாதுகாப்பு படையினருக்கும் பிரதமர் நன்றி தெரிவித்துள்ளார். தேர்தலை நேர்மையாக நடத்தி முடித்தமைக்காக தேர்தல் ஆணையத்திற்கும் பிரதமர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

*__மோடி தியானம்__* __(12)__

வளர்ச்சி அடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற குறிக்கோளுக்கு திருக்குறள் தான் ஊக்கத்தை அளித்ததாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். தமிழகத்தில் குமரிக் கடல் பகுதியில் அமைந்துள்ள விவேகானந்தர் மண்டபத்தில் பிரதமர் திரு நரேந்திர மோடி கடந்த 3 நாட்களாக தியானம் மேற்கொண்டார். நேற்று பிற்பகல் 2 மணியளவில் தனது 45 மணி நேர தியானத்தை நிறைவு செய்த அவர், விவேகானந்தர் மண்டபத்தில் பணியாற்றும் பணியாளர்களுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டார். தொடர்ந்து, தனிப் படகு மூலம் அருகில் உள்ள திருவள்ளுவர் சிலை அமைந்துள்ள பாறைக்கு சென்று அங்கு திருவள்ளுவர் பாதத்தில் மலர் மாலை வைத்து வணங்கினார். சர்வதேச நிகழ்ச்சிகளில் தாம் பங்கேற்று பேசிய போதெல்லாம் திருக்குறளை எடுத்துக் கூறும் வாய்ப்பினை பெற்றதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

***காங்கிரஸ் கூட்டம்*** (10)

நாடாளுமன்ற தேர்தல் முடிவுகள் நாளை மறுதினம் வெளியாக உள்ள நிலையில் அடுத்தக் கட்ட உத்திகள் குறித்த ஆலோசனையில் காங்கிரஸ் கட்சி தலைவர்கள் ஈடுபட்டுள்ளனர். புதுடெல்லியில் இன்று நடைபெற்ற அக்கட்சியின் தேர்தலுக்கு பிந்தைய ஆலோசனை கூட்டத்தில், கட்சியின் தேசிய தலைவர் திரு மல்லிகார்ஜீன கார்கே, காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் திரு ராகுல்காந்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர். முன்னதாக, திரு மல்லியார்ஜீன கார்கே இல்லத்தில் நடைபெற்ற இண்டி கூட்டணி கட்சி தலைவர்களின் ஆலோசனை கூட்டத்தில் கம்யூனிஸ்ட், திமுக, ஐக்கிய ஜனதா தளம், சிவசேனா, தேசியவாத காங்கிரஸ், ஆம் ஆத்மி உள்ளிட்ட கட்சி தலைவர்கள் பங்கேற்றனர்.

***சுங்கச்சாவடி*** (6)

நாடு முழுவதும் உள்ள சுங்கச்சாவடிகளில் கட்டண உயர்வு இன்று நள்ளிரவு முதல் அமலுக்கு வருகிறது. தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள ஆயிரத்து 228 சுங்கச்சாவடிகளும், தமிழகத்தில் 339 சுங்கச்சாவடிகளும் அமைந்துள்ளன. முதற்கட்டமாக வேலூர், விழுப்புரம், கள்ளக்குடி, வல்லம் ஆகிய சுங்கச்சாவடிகளில் கட்டண உயர்வு இன்று நள்ளிரவு முதல் அமலுக்க வருவதாக தேசிய நெடுஞ்சாலை ஆணையம் அறிவித்துள்ளது.

***கருத்துக் கணிப்பு*** (7)

பல தனியார் தொலைக்காட்சி செய்தி சேனல்கள் மற்றும் பிற செய்தி ஏஜென்சிகள் நேற்று வெளியிட்ட மக்களவை தேர்தலுக்கான புள்ளி விவரங்களை காங்கிரஸ் கட்சி நிராகரித்துள்ளது. இது தொடர்பாக அக்கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான திரு ஜெயராம் ரமேஷ் கூறுகையில், கருத்து கணிப்பு முற்றிலும் போலியானது என்றும்

தெரிவித்துள்ளார். இந்தியா கூட்டணி 295 இடங்களை பெறப் போகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

<u>***தெலங்கான உதய தினம்*** (14)</u>

தெலங்கானா மாநில உதய தினம் இன்று அம்மாநிலத்தில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இன்று காலை செகந்திராபாத் பரேட் மைதானத்தில் நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சியில் அம்மாநில முதலமைச்சர் திரு ரேவந்த் ரெட்டி மரியாதை செலுத்தினார். இந்த விழாவில், ஜெய ஜெய ஹே தெலங்கானா என்ற மாநில கீதம் அதிகாரபூர்வமாக வெளியிடப்பட்டது. முன்னதாக, தெலங்கானா தனி மாநில கோரிக்கைக்காக உயிர் தியாகம் செய்த தியாகிகளுக்கு முதலமைச்சர் திரு ரேவந்த் ரெட்டி மரியாதை செலுத்தினார்.

தெலங்கானா மாநில உதய தினத்தை முன்னிட்டு அம்மாநில மக்களுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தமது சமூக ஊடகப் பதிவில் விடுத்துள்ள செய்தியில், இந்த மாநிலம் வளமான வரலாறு மற்றும் மிகவும் துடிப்பான கலாச்சாரத்துடன் ஆசிர்வதிக்கப்பட்டுள்ளது என்று கூறினார். வரும் காலங்களில் மாநிலத்தின் வளர்ச்சிக்காக தொடர்ந்து பாடுபட உறுதி பூண்டிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

<u>***செஸ்*** (5)</u>

இந்தியாவின் கிராண்ட் மாஸ்டர் பிரக்யானந்தா உலகின் 2 ஆம் நிலை வீரரான அமெரிக்காவின் ஃபேபியானோ கருவானாவை வீழ்த்தி மகத்தான வெற்றி பெற்றுள்ளார். ஸ்ட்ராவஞ்சரில் நடந்த நார்வே செஸ் போட்டியில் 5 ஆவது சுற்று முடிவில், உலக தர வரிசையில் முதல் 10 இடங்களுக்குள் நுழைந்துள்ளார்.